# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் வளாகம் - நோர்வே

மாதாந்தப்பாடத்திட்டம் 2023- 2024

ஆவணி, புரட்டாதி

வகுப்பு 9

பாடம்1 : **தமிழர் ஆடற்கலை**

**கற்பித்தல் காலம்: 3 வாரங்கள்**

| | |
|---|---|
| அடைவு | மாணவர்கள் பழந்தமிழர் ஆடற்கலை பற்றி அறிந்து, தமிழரின் அடையாளங்களாகிய கலைகளைப் பயிலவும் பேணவும் கற்றுக் கொள்வார்கள்.<br><br>இலக்கணம்: பகுக்கக் கூடிய சொற்களையும் பகுக்க முடியாத சொற்களையும் கண்டறிவர். |
| துணைக்கருவிகள் | ஆடற்கலை பற்றிய காணொளி, ஆடற்கலைகளின் படங்கள்<br><br>ஆடல் சார்ந்த பாடல் உள்ள இறுவட்டுகள், அரங்கேற்ற விழா<br><br>இலக்கணம் - சொல்லட்டைகள், எழுத்து அட்டைகள் |
| செயற்பாடு | காட்சிப்படுத்தல்<br><br>குழுச்செயற்பாடு<br><br>ஒப்படை |
| **வாரம் 1** | |
| 25.08.23வெள்ளி<br><br>26.08.23 சனி | ஆசிரியர் மாணவர் வரவேற்பு, அறிமுகம்<br><br>பாடநூல் அறிமுகம் - கலந்துரையாடுதல்<br><br>**செயற்பாடு:**<br><br>❖ கோடைகால விடுமுறை பற்றிக் கலந்துரையாடுதல்.<br><br>❖ கடந்தகால வகுப்பில்(ஆண்டு 8) கற்றதையும் கலந்துரையாடுதல்<br><br>**கலந்துரையாடுவோம்:** இணைந்த செயற்பாடு<br><br>பாடநூலிலுள்ள காட்சியை மையப்படுத்திக் கதைத்தல். (தமிழர்களின் கலைகள் - பழந்தமிழர் ஆடற்கலை) (கேட்டல், பேசுதல்)<br><br>மாணவர் வாசித்தல் |

| வீட்டுவேலை | கோடைகால விடுமுறை பற்றி எழுதுதல். |
|---|---|
| **வாரம் 2** | **பாடம் 1 தமிழர்ஆடற்கலை தொடர்ச்சி** |
| 01.09.23வெள்ளி<br>02.09.23 சனி | **பாடவிளக்கம்**<br>• பாடத்தலைப்பு சார்ந்து காட்சிப்படுத்திக் கலந்துரையாடல்.<br>• மாணவர்களுக்குத் தெரிந்த கலைகள் பற்றிக் கேட்டு அறிந்து உரையாடுதல்.<br>• கலைகள் பயிலும் மாணவர்களின் பட்டறிவுகளையும் கூறக் கேட்டல்.<br>• பழந்தமிழர் ஆடற்கலை சார்ந்து ஆசிரியர்(ஏற்கனவே) தயாரித்த வினாக்களின் ஊடாக கலந்துரையாடி,, அதன் பின்னர் பாடத் தலைப்புக்குச் செல்லுதல்.<br>• **புதிய சொற்களை** எழுதுபலகையில் எழுதிக் காட்சிப்படுத்திக், கலந்துரையாடல்.<br>• பாடத்தை மௌனமாக கருத்தூன்றி வாசித்தல்.<br>• வாசிப்புப் பொறிமுறைக்கு அமைய உரத்து வாசித்தல்.<br>• ஆசிரியர் பாடத்தை வாசித்து, விளக்கம் கொடுத்தல்.<br>தகவல் பெட்டகம் - புனல் நயந்து ஆடல்<br>ஆசிரியர் தகவல் பெட்டகம் பற்றிய விளக்கத்தைக் கொடுத்து, அதன் அகத்தியத்தை விளக்குதல்<br>செயற்பாடு : தலைப்பை விளக்குதல். பழந்தமிழரின் வரலாற்றில் புனல் நயந்து ஆடலின் சிறப்பு, உடை, அணிகலன் போன்றவற்றைக் கூறுதல்.<br>கேட்டல், பேசுதல், வாசித்தல்,<br>**குழுச் செயற்பாடு - இணைந்த செயற்பாடு**<br>வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிந்து, கூறி எழுதுதல்.<br>(கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல்) |

| | |
|---|---|
| | **இலக்கணம்: சொல்**<br><br>பகாச்சொல் - பகுச்சொல் - பகுசொல் உறுப்புகள்<br><br>மனவரைபடம் மூலமாக விளக்குதல்<br><br>பகுசொல், பகாச்சொற்களை வேறுபடுத்துவதற்குச் சொல்லட்டைகளைப் பயன்படுத்தல்.<br><br>பகுசொல் உறுப்புகள் - எழுத்து அட்டைகளைப் பயன்படுத்தல். |
| வீட்டுவேலை | பாடத்தை வாசித்து, வந்து கூறுதல். |
| **வாரம் 3** | **பாடம் 1 தமிழர் ஆடற்கலை தொடர்ச்சி** |
| 08.09.23வெள்ளி<br><br>09.09.23 சனி | **இலக்கணம் - மீட்டல்**<br>மாணவர்கள் தாமாக இலக்கணப் பயிற்சியைச் செய்தல்.<br><br>**குழுச் செயற்பாடு/இணைந்த செயற்பாடு**<br>ஆசிரியரால் கொடுக்கப்படும் படத்தைப் பார்த்துக் கலந்துரையாடுதல்.<br><br>குழுக்களுக்கு தாயகம் சார்ந்த படத்தைக் கொடுத்துக், கலந்துரையாடி, பேசுதல்.<br><br>**குறுக்கெழுத்து – குழு விளையாட்டு**<br><br>**சிறுகதை எழுதுதல்** - ஒரு படத்துடன் சிறு கதையை (மாதிரி) எழுதிக் காட்சிப்படுத்திக் காட்டி எழுதவைத்தல்.<br><br>படத்தைக் காட்சிப்படுத்தல். கலந்துரையாடுதல், சிந்திக்கத் தூண்டுதல். வகுப்பில் மாணவர்கள் தாமாகவே எழுதுதல்<br><br>(பேசுதல், எழுதுதல்)<br><br>**அறிவாடல் போட்டி நிகழ்ச்சிக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துதல்.** |
| வீட்டுவேலை | **செயல் 3** வாசித்தல், எழுதுதல் |

**பாடம் 2 : தமிழிலக்கிய வரலாறு**

**கற்பித்தல் காலம்: 3 வாரங்கள்**

| | |
|---|---|
| அடைவு | தமிழிலக்கிய வரலாற்றினூடாக ஆழ்வார்கள், நாயன்மார்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளை அறிதல்.<br><br>**இலக்கணம்:** உயிர் முன் உயிர் புணரும் போதும், மெய் முன் உயிர் புணரும் போதும் ஏற்படும் மாற்றங்களை அறிதல். |
| துணைக்கருவிகள் | தமிழிலக்கிய வரலாறு பற்றிய காட்சிகள், படங்கள், காணொளிகள், ஈழவரைபடம், இணையம்<br><br>சொல்லட்டைகள், எழுத்து அட்டைகள் |
| செயற்பாடு | காட்சிப்படுத்தல், குழுச்செயற்பாடு, ஒப்படை |
| **வாரம் 4** | |
| 15.09.23வெள்ளி<br><br>16.09.23 சனி | ஆசிரியர் காட்சிப் படுத்தல் மூலம் இலக்கிய நூல்கள், வரலாறு பற்றிய அறிமுகம் (சங்கம் மருவிய கால நூல்கள், சமயம்: சைவம், வைணவம், சமணம், பௌத்தம் மற்றும் நாயன்மார்கள், ஆழ்வார்கள் பற்றிய தகவல்கள் வழங்குதல்)<br><br>• பாடத்தலைப்புச் சார்ந்து காட்சிப்படுத்திக் கலந்துரையாடல்<br><br>• மாணவர்களுக்குத் தெரிந்த, அறிந்த இலக்கிய நூல்களைப் பற்றிக் கேட்டுத் அறிந்து உரையாடுதல். – **நோர்வேயிய இலக்கிய நூல்களைக்** கேட்டு, எழுதுபலகையில் எழுதுதல்.<br><br>• பாடத்தை மௌனமாகக் கருத்தூன்றி வாசித்தல்.<br><br>• வாசிப்புப் பொறிமுறைக்கு அமைய உரத்து வாசித்தல்.<br><br>  • ஆசிரியர் பாடத்தை வாசித்து, விளக்கம் கொடுத்தல்.<br><br>**புதிய சொற்கள்** - வாசித்துப் பொருள் விளங்க வைத்தல். |

| | |
|---|---|
| | **செயற்பாடு** :புதிய சொற்களுக்கு சொல்லியம் எழுதுதல்.<br><br>தகவல் பெட்டகம் - வாசித்தல், கேட்டல் - (அறிதல்)<br><br>**காட்சிப்படுத்தல்**: உயிரினங்களின் உண்ணும் முறைகள்<br><br>(கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல்)<br>(பேசுதல், எழுதுதல்)<br><br>**அறிவாடல் போட்டி நிகழ்ச்சிக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துதல்.** |
| வீட்டுவேலை | பாடம் 2 - வினாவிடை - எழுதுதல் |
| **வாரம் 5** | **பாடம் 2 தமிழிலக்கிய வரலாறு தொடர்ச்சி** |
| 22.09.23வெள்ளி<br><br>23.09.23 சனி | பாடம் - மீட்டல்<br><br>• பாடத்தை சுருக்கமாகக் கூறி, மீட்டல் செய்தல்.<br>• கடினமான சொற்களுக்கு மீண்டும் விளக்கம் கொடுத்தல்.<br>• வினாக்கள் மூலம் பாடவிளக்கத்தைத் தெரிந்து கொள்ளல்<br><br>**குழு செயற்பாடுகள்**: தமிழ் இலக்கியங்களையும் வாழிட நாட்டு மற்றும் வேறு நாட்டு இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் கலந்துரையாட வைத்தல்.<br><br>**இலக்கணம்:** **சொல்**<br><br>புணர்ச்சி:<br>• ஆண்டு 8ல் கற்றதை மீட்டல்<br>• உயிரீற்றுப் புணர்ச்சி<br>• ஆசிரியர் தயாரித்த பயிற்சிகளைச் செய்தல்<br><br>**செயல் 4 அ) – குழுச்செயற்பாடுகள்: விளையாட்டு**<br>ஆசிரியர் தயாரித்த சொல்லட்டையைப் பயன்படுத்தி, சொற்களை ஆக்குதல். |

| | |
|---|---|
| | **செயல் 2 இணைந்து செயற்படுவோம்: ஒப்படை:**<br><br>தமிழர் கலைகள் - பாடம் 1ல் கொடுக்கப்பட்ட சொற்களை வைத்து எழுத வைத்தல்.<br><br>ஈழவரலாறு - பாடம் 1ல் ஆசிரியரால் வழங்கப்பட்ட படத்தைக் கொண்டு எழுதுதல்.<br><br>(கூறக்கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல்)<br>(பேசுதல், எழுதுதல்)<br><br>**அறிவாடல் போட்டி நிகழ்ச்சிக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துதல்.(** 24.09.23ம் திகதி நடைபெறும்)) |
| வீட்டுவேலை | ஒப்படையை முழுமையாக முடித்தல்.<br><br>நோர்வேயிய மொழியில் - மாணவர்கள் தாம் கற்ற,அறிந்த, மரபுத்தொடர்களைத் எழுதிவருதல். |
| **வாரம் 6** | **பாடம் 2 தமிழிலக்கிய வரலாறு தொடர்ச்சி** |
| 29.09.23வெள்ளி<br><br>30.09.23 சனி | இலக்கணம் - மீட்டல்<br><br>**இலக்கணம் : மெய்யீற்றுப் புணர்ச்சி**<br><br>செயல்:<br><br>• 1, 2 சொல்லட்டைகள் பாவித்து பயிற்சியைச் செய்தல்.<br><br>• 3 இல் உள்ள பாடலைக் **கவிநயத்துடன்** வாசித்து விளக்குதல் ( பாரதிதாசன் - காட்சிப்படுத்தி, விளக்குதல்)<br><br>• பாடலைக் கேட்டல், வாசித்தல்<br><br>**மரபுத்தொடர்**: காட்சிப்படுத்தலும் விளக்கமும்<br><br>நோர்வேயிய நாட்டு மொழியில் காணப்படும் மரபுத்தொடர்களை விளக்குதல்.<br><br>கட்டுரை: ‘‘வாசிப்புத்திறன்’’<br><br>குழுச்செயற்பாடு: சட்டகம் தயாரித்தல். |

| | |
|---|---|
| வீட்டுவேலை | **செயல் 5** கட்டுரை: ‘வாசிப்புத்திறன்’ (வகுப்பில் தயாரித்த சட்டகத்தைப் பயன்படுத்தி எழுதுதல்) |